RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 312 | நவம்பர்.12 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## அமெரிக்கர்களுக்கு வரி வருவாயிலிருந்து ரூ.1.77 லட்சம் டிவிடெண்ட் வழங்கப்படும்: ட்ரம்ப் அறிவிப்பு



வாஷிங்டன், நவ.12-

அமெரிக்கர்களுக்கு வரி வருவாயிலிருந்து டிவிடெண்டாக தலா ரூ.1.77 லட்சம் வழங்கப்படும் என அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக கடந்த ஜனவரி மாதம் பொறுப்பேற்ற டொனால்டு ட்ரம்ப், இறக்குமதியாகும் பொருட்களுக்கு அதை உற்பத்தி செய்யும் நாட்டைப் பொறுத்து 10 முதல் 50% வரை வரி விதித்தார். நீண்டகாலமாக நிலவும் வர்த்தக பற்றாக்குறையை சரி செய்யவே இந்த நடவடிக்கை என அவர் தெரிவித்தார். நாடாளுமன்ற ஒப்புதலைப் பெறாமல் மேற்கொண்ட இந்த நடவடிக்கையை எதிர்த்து அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதை விசாரித்த உச்ச நீதிமன்றம், ட்ரம்ப் நடவடிக்கையின் சட்டபூர்வமான தன்மை குறித்து சந்தேகங்களை எழுப்பியது. இதனால் பல வரிகள் ரத்து செய்ய வாய்ப்பு உள்ளது.

இதனால் 100 பில்லியன் டாலருக்கும் அதிகமான பணத்தை திருப்பித் தர வேண்டிய நிலை ஏற்படும். இதனிடையே, தனக்கு எதிராக உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால் அது ஒரு பேரழிவாக இருக்கும் என ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக வலைதளத்தில் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட பதிவில், "இறக்குமதி பொருட்கள் மீது அதிக வரி விதிப்பதால், அமெரிக்கா பணக்கார மற்றும் உலகில் மிகவும் மதிக்கப்படும் நாடாக மாறும். வரி விதிப்பு பற்றி குறை கூறுபவர்கள் முட்டாள்கள். வரி வருவாயிலிருந்து பெரும்பாலான அமெரிக்கர்களுக்கு (பணக்காரர்கள் தவிர) தலா 2 ஆயிரம் டாலர் விரைவில் டிவிடெண்டாக வழங்கப்படும்'' என பதிவிட்டுள்ளார்.

தனது வர்த்தக கொள்கைகளுக்கு பொதுமக்களின் ஆதரவை திரட்டுவதற்காகவே, 2 ஆயிரம் டாலர் (ரூ.1.77 லட்சம்) வழங்க ட்ரம்ப் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. அதேநேரம் இந்த தொகை எப்படி வழங்கப்படும் என்ற குழப்பம் நிலவி வந்தது.

இதுகுறித்து அமெரிக்க நிதியமைச்சர் ஸ்காட் பெசன்ட் கூறும்போது, "பொதுமக்களுக்கான 2 ஆயிரம் டாலர் டிவிடெண்ட் தொகை பல்வேறு வழிகளில் வழங்கப்படும். குறிப்பாக, வரி குறைப்பு செய்ய ட்ரம்ப் திட்டமிட்டிருக்கலாம். அத்துடன் டிப்ஸ்கள், கூடுதல் நேரம் பணிபுரிய, சமூக பாதுகாப்பு, வாகன கடன் ஆகியவற்றுக்கு வரி விலக்கு வழங்க திட்டமிட்டிருக்கலாம்'' என்றார்.

## மயிலாடுதுறை மாவட்ட மீனவர்கள் 14 பேர் கைது: மத்திய அமைச்சருக்கு முதல்வர் கடிதம்



மயிலாடுதுறை: நவ.12-

மயிலாடுதுறை மாவட்ட மீனவர்கள் 14 பேரை எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையினர் நேற்று முன்தினம் கைது செய்தனர். மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் அருகே வானகிரி மீனவக் கிராமத்தைச் சேர்ந்த ராமையன் என்பவருக்கு சொந்தமான விசைப் படகில் கடந்த 3ம் தேதி ராஜேந்திரன், சிவதாஸ், குழந்தை வேல், ரஞ்சித், ராஜ், கலை, குகன், பிரசாத், அகிலன், ஆகாஷ், ராபின், ராஜ்குமார், தரங்கம்பாடி கோவிந்து, கடலூர் பாரதி ஆகிய 14 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

கடந்த 4ம் தேதி ஜெகதாப்பட்டினம் அருகே கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது படகு பழுதடைந்தது. இதையடுத்து, அந்த வழியாக வந்த பிற மீனவர்களின் உதவியுடன் படகை ஜெகதாப்பட்டினம் கொண்டுசென்று, பழுதுநீக்கம் செய்த பின்னர், அங்கிருந்து கடந்த 8ம் தேதி மீண்டும் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு மீண்டும் படகு பழுதடைந்து கடலில் தத்தளித்த நிலையில், அங்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி 14 மீனவர்களையும், படகுடன் கைது செய்து, இலங்கை மயிலடி மீன்பிடி துறைமுகத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். பின்னர் கைது செய்யப்பட்ட 14 பேரையும் ஊர்க்காவல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர்.

ஏற்கெனவே, கடந்த 2ம் தேதி நாகை மாவட்டம் நம்பியார் நகர் மற்றும் அக்கரைப்பேட்டை மீனவ கிராமங்களைச் சேர்ந்த 31 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். தற்போது மேலும் 14 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் அனைவரையும் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்களின் குடும்பத்தினர் வலியுறுத்தி உள்ளனர்.

முதல்வர் கடிதம்: இதற்கிடையே மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது: நவ.9ம் தேதி இரவு, மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்களையும், அவர்களது படகையும் இலங்கை கடற்படையினர் சிறை பிடித்துள்ளதை தங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

அந்த வகையில் இதுவரை 128 தமிழக மீனவர்கள் சிறையில் உள்ளனர். 248 மீன்பிடிப் படகுகளும் இலங்கை காவலில் உள்ளன. நீண்டகாலமாக உள்ள இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கண்டு, சிறை பிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் விடுவிக்கவும், படகுகளை மீட்கவும் தேவையான அனைத்து தூதரக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும். இவ்வாறு கடிதத்தில் முதல்வர் தெரிவித்துள்ளார்.

## 33% மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்த கோரி மனு: மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்



புதுடெல்லி, நவ.12-

மக்களவை, மாநில சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டை அமல்படுத்தக் கோரி உச்ச நீதிமன்றத்தில் பொது நல மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மனு குறித்து பதில் அளிக்குமாறு மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது.

மக்களவை, மாநில சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க வகை செய்யும் நாரி சக்தி வந்தன் மசோதா கடந்த 2023ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இந்த சட்டம் இதுவரை அமல்படுத்தப்படவில்லை. நாடு முழுவதும் வரும் 2027ம் ஆண்டு பிப்ரவரியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. இதன்பிறகு மக்கள் தொகையின் அடிப்படையில் தொகுதிகள் மறுவரையறை செய்யப்படும்.

புதிய தொகுதிகளின் அடிப்படையில் 33 சதவீத மகளிர் இடஒதுக்கீடு அமல் செய்யப்படும். இதன்படி வரும் 2029ம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போது மகளிர் இடஒதுக்கீடு அமலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழலில் காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெயா தாக்குர் உச்ச நீதிமன்றத்தில் பொதுநல மனுவை தாக்கல் செய்துள்ளார். அதில், "நாட்டின் மக்கள் தொகையில் 50 சதவீதம் பேர் பெண்கள். ஆனால் மக்களவை, சட்டப்பேரவைகளில் 4 சதவீத பெண் பிரதிநிதிகள் மட்டுமே உள்ளனர். 33 சதவீத மகளிர் இடஒதுக்கீடு சட்டம் எப்போது அமலுக்கு வரும் என்பது யாருக்கும் தெரியவில்லை. இந்த சட்டத்தை உடனடியாக அமல் செய்ய வேண்டும்'' என்று கோரப்பட்டு உள்ளது. நீதிபதிகள் நாகரத்னா, மகாதேவன் அமர்வு முன்பு நேற்று வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் கூறியதாவது: இந்திய மக்கள் தொகையில் பாதி அளவுக்கு பெண்கள் உள்ளனர். ஆனால் மக்களவை, சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் இல்லை. இந்தியாவின் மிகப்பெரிய சிறுபான்மை சமூகமாக பெண்கள் உள்ளனர். இடஒதுக்கீட்டை அமல் செய்யக் கோரி நீதிமன்றத்தை அவர்கள் நாடும் சூழல் இருக்கிறது. மத்திய அரசின் கொள்கை முடிவுகளில் நீதிமன்றம் தலையிட முடியாது. எனவே இந்த மனு குறித்து மத்திய அரசு விரிவான பதில் மனுவை தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் தெரிவித்தனர். நீதிபதிகளின் உத்தரவின்படி மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு உள்ளது. மத்திய அரசு பதில் மனுவை தாக்கல் செய்த பிறகு தொடர்ந்து

விசாரணை நடத்தப்படும்.

## மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை மத்திய அரசு விரைந்து கட்டித்தர வேண்டும்: அமைச்சர் மா.சுப்பிரமணியன்



மதுரை, நவ.12-

ராமநாதபுரத்தில் படிக்கும் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இன்னும் ஓராண்டில் எய்ம்ஸ் மருத்துவமனையை பார்க்காமலே டிகிரி வாங்கி சென்றுவிடுவர். அதற்குள்ளாவது மத்திய அரசு எய்ம்ஸ் மருத்துவமனையை விரைந்து கட்டித்தர வேண்டும் என மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வலியுறுத்தினார்.

மதுரை ராஜாஜி மருத்துவமனையில் ரூ.50 லட்சத்திலான நவீன டெக்சாஸ் ஸ்கேன் மையத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். அப்போது அமைச்சர்கள் பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் பங்கேற்றனர். பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியது: "கடந்த 2018ல் டிசம்பர் 17ம் தேதி 7 மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க மத்திய அரசு அறிவித்தது. அதன்படி பஞ்சாப், பிஹார், ஜம்மு, காஷ்மீர் உள்ளிட்ட 6 மாநிலங்களில் கட்டி முடித்துவிட்டனர். தமிழகம் நீங்கலாக 6 மாநிலங்களுக்கும் மத்திய அரசு நிதி வழங்கியது.

தமிழகத்துக்கு மட்டும் ஜப்பான் ஜெய்க்கா நிதி நிறுவனத்தின் 85 சதவீத நிதி உதவியும், 15 சதவீதம் மத்திய அரசும் நிதி ஒதுக்கியது. 2019 ஜனவரி 27ல் பிரதமர், அப்போதைய முதல்வர் பழனிசாமி, எம்.பி தேர்தலை மனதில் வைத்து அடிக்கல் நாட்டினர். 2021ம் ஆண்டு மே 7ம் தேதி வரை எதுவுமே செய்யவில்லை. திமுக அரசு பொறுப்பேற்ற பின்பு எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கான 222 ஏக்கர் நிலத்தை ஆதாரபூர்வமாக வழங்கியது. தொடர்ந்து தமிழக முதல்வர், பிரதமரை சந்தித்து வலியுறுத்தினார். இதற்கிடையில் 2022ம் ஆண்டு எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரிக்கு 50 மாணவர்கள் சேர்ந்தனர்.

தமிழக முதல்வர் மறுத்திருந்தால் எய்ம்ஸ் வராமல் போயிருக்கும். எனவே ராமநாதபுரம் மருத்துவக் கல்லூரியில் அந்த மாணவர்கள் படிக்க தமிழக முதல்வர் அனுமதி வழங்கினார். தற்போது வரை 4 ஆண்டுகளில் 200 எய்ம்ஸ் மாணவர்கள் படிக்கின்றனர். ஆனால், இன்னும் எய்ம்ஸ் கட்டி முடிக்கவில்லை. இன்னும் ஓராண்டு முடிந்தால் எய்ம்ஸ் மாணவர்கள் கல்லூரியை பார்க்காமலே டிகிரி வாங்கி சென்றுவிடுவர்.

அம்மாணவர்கள் கல்லூரியை பார்த்துவிட்டு செல்லும் வகையில் கட்டி முடிக்க வேண்டும். அதில் நமக்கும் பொறுப்பு இருக்கிறது என தமிழக முதல்வர், எங்களை 2023ல் பிப்.6, 7ம் தேதி ஜப்பான் போகச் சொன்னார். தமிழகத்தில் இருந்து நானும் ஒரு குழுவோடு சேர்ந்து டோக்கியோவில் உள்ள ஜெய்க்கா நிறுவன துணைத் தலைவரை சந்தித்து கடிதம் கொடுத்தோம்.

ஜெய்க்காவின் டெல்லி பிரதிநிதியான ஆதித்யாபூரி என்ற சகோதரியை அழைத்துச் சென்றோம். அங்கு கொடுத்த பின்புதான் மருத்துவக் கல்லூரி மருத்துமனையை கட்டத் தொடங்கியுள்ளனர். அதுவே எங்களுக்கு மகிழ்ச்சி. அதனை விரைந்த கட்டித்தர மத்திய அரசுக்கு எல்லா வகையில் உறுதுணையாக இருந்து வருகிறோம். மேலும், அங்கு 33 கிலோ வாட் மின்சார உபயோகத்திற்கு ரூ.13 கோடி 13 லட்சத்து 71 ஆயிரத்து 148ம், குடிநீர் கட்டமைப்புக்கு ரூ.11 கோடி 66 லட்சமும் தமிழக அரசு வழங்கியுள்ளது. மத்திய அரசோடு இணைந்தே மாநில அரசு செயல்படுகிறது. எய்ம்ஸ் விரைந்து கட்டி முடித்து மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும்'' என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில், மதுரை தெற்கு எம்.எல்.ஏ திரமு. பூமிநாதன், மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி இயக்கம் இயக்குநர் சுகந்தி ராஜ குமாரி, மு.பூமிநாதன் எம்எல்ஏ, மருத்துவக் கல்லூரி டீன் அருள் சுந்தரேஷ் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் ஆகியோர் உடனிருந்தனர்.

## அமைச்சர் அன்பில் மகேஸ் தலைமையில் பாடத்திட்ட மாற்றம் குறித்து நவ.23, 24ல் ஆலோசனை



சென்னை, நவ.12-

பள்ளிக்கல்வித் துறையில் பாடத்திட்ட மாற்றம் தொடர்பான முதல் ஆலோசனைக் கூட்டம் அமைச்சர் அன்பில் மகேஸ் தலைமையில் நவ. 23, 24ம் தேதிகளில் நடைபெற உள்ளது.

மத்திய அரசின் தேசிய கல்விக் கொள்கை 2020க்கு தமிழக அரசு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இதற்கு மாற்றாக, மாநிலத்துக்கு என பிரத்யேக கல்விக் கொள்கையை வடிவமைத்து தமிழக அரசு வெளியிட்டது. இதையடுத்து, புதிய பாடத்திட்டத்தை வடிவமைப்பதற்கான வல்லுநர் குழு மற்றும் அதை மேற்பார்வையிட்டு ஒப்புதல் அளிப்பதற்கான உயர்நிலைக் குழு என 2 குழுக்களை பள்ளிக்கல்வித் துறைசமீபத்தில் நியமனம் செய்தது.

உயர்நிலைக் குழுவில் அமைச்சர் அன்பில் மகேஸ், இஸ்ரோ தலைவர் வி.நாராயணன், கிரிக்கெட் வீரர் அஸ்வின் உள்ளிட்ட 16 பேரும், பாடத்திட்ட வடிவமைப்புக் குழுவில் திட்டக்குழு உறுப்பினர் சுல்தான் அகமது இஸ்மாயில், விஞ்ஞானி த.வி.வெங்கடேஸ்வரன் உள்ளிட்ட 20 பேரும் உள்ளனர். இந்நிலையில், பாடத்திட்டமாற்றம் தொடர்பாக சென்னையில் நவ.23, 24ம் தேதிகளில் ஆலோசனை நடைபெற உள்ளது. அமைச்சர் அன்பில் மகேஸ் தலைமை வகிக்கிறார். இதில்பங்கேற்க குழு உறுப்பினர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். தற்போதைய காலச் சூழலுக்கு ஏற்ப பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள், தகவல்களை பாடத்தில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிகிறது.

## பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் வரை மாநிலங்களுக்கு இடையே ஆம்னி பேருந்துகள் இயக்கப்படாது என உரிமையாளர்கள் அறிவிப்பு

சென்னை, நவ.12-

தமிழகத்தில் இருந்து கடந்த 7ம் தேதி கேரளாவுக்கு சென்ற 30க்கும் மேற்பட்ட ஆம்னி பேருந்துகளை அம்மாநில போக்குவரத்து துறை சிறைபிடித்து ரூ.70 லட்சத்துக்கும் மேல் அபராதம் விதித்தது. இதே போல், கடந்த 7 நாட்களாக கர்நாடக போக்குவரத்து துறையும் தமிழக பதிவெண் கொண்ட 60க்கும் மேற்பட்ட ஆம்னி பேருந்துகளை தடுத்து ஒவ்வொரு பேருந்துக்கும் ரூ. 2.20 லட்சம் வரை அபராதம் விதித்தது.

இதுகுறித்து பேருந்து உரிமையாளர்கள் கேட்டபோது, ''2021ம் ஆண்டு மத்திய அரசால் உருவாக்கப்பட்ட 'ஆல் இந்தியா டூரிஸ்ட் பெர்மிட்' படி தமிழகத்தில் அண்டை மாநில பேருந்துகளுக்கு சாலை வரி வசூலிக்கப்படுகிறது. எனவே, நாங்களும் வசூலிக்கிறோம்'' என கேரள, கர்நாடக போக்குவரத்துறையினர் தெரிவித்தனர். இந்நிலையில், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, புதுச்சேரி இடையே இயக்கப்பட்டு வரும் ஆம்னி பேருந்துகள் இயக்கப்படாது என்று அந்தந்த மாநில ஆம்னி பேருந்துகளின் உரிமையாளர்கள் சங்கம் கூட்டாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து, ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் கூறும்போது, ''மாநிலங்களுக்கு இடையே இயக்கப்படும் ஆம்னி பேருந்துகளுக்கு காலாண்டுக்கு தமிழக சாலைவரி ரூ.1,50,000, ஆல் இந்தியா டூரிஸ்ட் பெர்மிட் சாலை வரி ரூ.90,000 மற்றும் கேரளா, கர்நாடகா சாலை வரி சுமார் ரூ.2 லட்சம் என மொத்தம் ரூ.4.50 லட்சம் செலுத்தி பேருந்துகளை இயக்க முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். ஆம்னி பேருந்துகளுக்கு தனித்துவமான பெர்மிட்டை மத்திய அரசு வழங்க வேண்டும்.

வரித்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை. தமிழக அரசு இந்த பிரச்சினையில் தலையிட்டு நிரந்தர தீர்வு கான வேண்டும்'' என்றனர். இதனிடையே, தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கரை ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் நேற்று சந்தித்து கோரிக்கைகளை முன் வைத்தனர். இதுகுறித்து அதிகாரிகளுடன் கலந்து ஆலோசிப்பதாக அமைச்சர் தெரிவித்தார். இந்த பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படாத நிலையில், அரசுடன் பேச்சுவார்த்தை தொடர்வதால் இனி மாநிலங்களுக்கு இடையே ஆம்னி பேருந்துகள் இயக்கப்படாது.

மாநிலத்துக்குள் மட்டுமே பேருந்துகள் இயக்கப்படும் என ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்தனர். பயணிகளின் வசதிக்காக, அரசு விரைவு போக்குவரத்து கழகம் மூலம் ஆந்திராவுக்கு 70 பேருந்துகளும், கர்நாடகாவுக்கு 183 பேருந்துகளும், கேரளாவுக்கு 85 பேருந்துகளும் இயக்க பெரிமிட் உள்ளது. தேவை இருக்கும் பட்சத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.



■ மதுரை மாநகராட்சி வெள்ளிவீதியார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் திறந்துவைத்தார் அருகில் பேராசிரியர் முனைவர் சாலமன் பாப்பையா அவர்கள், துணை மேயர் திரு.தி.நாகராஜன் அவர்கள், கல்விக்குழுத் தலைவர் திரு.ரவிச்சந்திரன் அவர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.




# தவறவிட்ட மணி பர்சை உரியவரிடம் ஒப்படைத்த காவலர் குவியும் பாராட்டுக்கள்

நாகர்கோவில், நவ.12-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் ஆசாரிப்பள்ளம் டெரிக் சந்திப்பு செல்லும் சாலை இடையே உள்ள வழியில் யாரோ நபர் தவறவிட்ட மணிபர்ஸ் கிடந்துள்ளது,இதனை வெள்ளி சந்தை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வா ளர்.என். ராமகிருஷ்ணன் பணிமுடிந்து வீடு திரும்பிய போது கவனித்துள்ளார், உடனடியாக அந்த மணி பர்சை மீட்டு சோதனை செய்ததில் ரூ22,000 மற்றும் ஏ.டி.எம் கார்டு,2 பேன் கார்டு,ஆர்சி புக், ஒரி ஜினல் டிரைவிங் லைசன்ஸ் ஆகியவை இருந்துள்ளது,உடனே பர்ஸில் இருந்த ஓட்டுநர் லைசன்ஸ் முகவரி நபரை தொடர்பு கொண்டு,நேரில் அழைத்து தவறவிட்ட மணிபர்ஸை வழங்கினார், மணி பர்ஸை தவறவிட்ட நபர் மற்றும் அவரது தாய் போலீசிடம் மணிபர்ஸை பெற்று கொண்டு நன்றி தெரிவித்து சென்றனர். இந்த புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது இதற்கு பல்வேறு தரப்பினர் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ராமகிருஷ்ணனுக்கு பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

# மது மற்றும் போதை பொருட்கள் அதிக நடமாட்டத்தால் குற்றங்கள் நடக்கிறது அதனை தடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்: செங்கோட்டையனை அதிமுகவிலிருந்து நீக்கியது துரதிஷ்ட வசமானது

## வேலூர் சட்டமன்ற தொகுதியில் புதிய நீதிக்கட்சி போட்டியிடும் புதிய நீதிக்கட்சியின் தலைவர் ஏ.சி.சண்முகம் காட்பாடியில் பேட்டி

வேலூர், நவ.12-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காங்கேயநல்லூரில் உள்ள திருமுருக கிருபானந்த வாரியர் ஆலயத்தில் வரும் 12 ஆம் தேதி ஆன்மிக சொற்பொழிவாளர் திருமுருக பக்தர் திருமுருக கிருபானந்த வாரியார் குருபூஜை நடக்கவுள்ளது. இதற்காக முன் கூட்டியே புதிய நீதிக்கட்சியின் தலைவர் ஏ.சி.சண்முகம் நேரில் வந்து திருமுருக கிருபானந்த வாரியாரின் திரு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வழிபாடு நடத்தினார் உடன் திரளான புதிய நீதிக்கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் புதிய நீதிக்கட்சியின் தலைவர் ஏ.சி.சண்முகம் கூறுகையில்

முருகனடிமை வாரியார் சுவாமிகள் உலகம் முழுவதும் ஆன்மிக பரப்புரை செய்தவர் அவரை வழிபாடு செய்தேன் புதிய நீதிக்கட்சி அரசியல் பயணம் பொருத்தவரையில்




தேசிய ஜனநாயக கூட்டணியிலேயே மோடி கட்சியுடன் இணைந்து செயல்படுவோம் தமிழகத்தில் மிகப்பெரிய அரசியல் மாற்றம் அமை யும் ஸ்டாலின் சொன்னதை போல் எல்லா அரசியல் கட்சியும் பேசுவார்கள் அவருடைய முதல்வரின் கருத்து தனிப்பட்ட திமுகவின் கருத்தை சொல்கிறார் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என்பது என்னுடைய கருத்து வேலூர் தொகுதியில் நீதிக்கட்சி போட்டியிட வாய்ப்புள்ளது ஆனால் ஏ.சி.சண்முகம் போட்டியிடமாட்டார் நாளைய மறுதினம் வ.உ.சி. செக்கிழுத்த செம்மல் அவரின் குருபூஜை ஒட்டபிடாரத்தில் நடக்கிறது அவருக்கு மணிமண்டபம் கட்டபட வேண்டுமென என்னுடைய சார்பில் பெரிய அளவில் வேளாளர்கள் முதலியார்களும் இணைந்து அதற்கான பணிகளை 18 ஆம் தேதி காலையில் அடிக்கல் நாட்டுகிறோம் ஒட்டபிடாரத்தில் மாலை அரசு சார்பிலும் சிறப்பு பூஜை நடத்தப்படவுள்ளது தேசிய ஜனநாயக கூட்டணியில் இரண்டே கட்சி தான் என் கிறார்கள் அதிமுகவை குறைத்து மதிப்பிட முடியாது திமுக அதிமுக மாறி மாறி தான் ஆட்சிக்கு வந்துள்ளது அரசின் பலவீனம் விலைவாசி உயர்வு, வீட்டு வரி உயர்வு, குடிநீர் கட்டண உயர்வு, அதைவிட அன்றாடம் தொலைக் காட்சிகளில் கொலை குற்ற சம்பவ செய்திகள் தான் வருகிறது. ஒரே நாளில் பல கொலைகள் அதற்கு அடிப்படை போதையும் மதுவும் தான் போதை பொருட்கள் பள்ளி வரையில் வந்துள்ளது அது அதிகமாக தமிழகத்தில் புழக்கத்தில் உள்ளது குடியால் போதையால் இவ்வளவு கொலைகள் வந்துகொண்டிக்கிறது சட்டங்களை கடுமையாக்க வேண்டும் சவுதி அரேபியா போன்ற நாடுகளில் உள்ள கடுமையான சட்டம் போல் இங்கும் சட்டம் இருக்க வேண்டும் சட்டம் கடுமையாக இருந்தால் தீவிரவாதிகள் தவறு செய்பவர்கள் பயப்படுகின்றனர் போதை மதுவால் தான் கொலைகள் நடக்கிறது இதனை தமிழக அரசு முற்றிலும் தடுக்க வேண்டும் வாக்காளர் சிறப்பு திருத்தம் குறித்தும் எல்லா கட்சியும் குறை சொல்கிறது ஒரு சிலருக்கு இரண்டு ஓட்டு இருக்கும் அதனை எல்லாம் சரி செய்ய வேண்டும் என்பது தான் தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது. அரசியல் பொது கூட்டங்களை முறைப்படுத்த வேண்டும் உயர்நீதிமன்றம் சொன்னதை போல் முறைப்படுத்த வேண்டும் அதனை முறைப்படுத்துவதில் தவறில்லை ஆரம்பத்தில் அதிக தொகை செலுத்தினால் தான் பொதுக்கூட்டம் நடத்த முடியும் என சொல்லுவார்கள் ஆனால் அவர்கள் பொது கூட்டம் நடத்தினால் அதன் பின்னர் அவைகள் குறைக்கபடும் அதிமுகவிலிருந்து முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனை நீக்கியது என்பது துரதிஷ்ட வசமானது என இவ்வாறு செய்தியாளர்கள் சந்திப்பின்போது கூறினார்.



# கல்லல் பகுதிகளில் நாளை மின்தடை அறிவிப்பு

சிவகங்கை, நவ.12-

சிவகங்கை மாவட்டம் கல்லல் துணையின் நிலைத்தில் மின் பராமரிப்பு நாளை (நவ13) கல்லல், ஆலம்பட்டு, குருந்தம்பட்டு, அரண்மனை சிறுவயல், வெற்றியூர், சாத்தரசம்பட்டி, பாகனேரி, நடராஜ புரம்,பனங்குடி,கண்டிப்பட்டி, கௌரிப்பட்டி, செம்பனூர், செவரக்கோட்டை, வெங்கட்ராமபுரம், கீழக்கோட்டை, தேவப் பட்டு, சொக்கநாதபுரம் ஆகிய பகுதிகளில் காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை மின்விநியோகம் இருக்காது என மின் செயற்பொறியாளர் அறிவித்துள்ளார்..




காட்பாடி சேனூர் ஊராட்சியில் அன்பு சோலை முதியோர் பகல் நேர மையம் கட்டிடத்தை தமிழக முதல்வரின் காணொளி காட்சியை தொடர்ந்து

# மாவட்ட ஆட்சியர் மற்றும் வேலூர் எம்.பி. ஆகியோர் குத்துவிளக்கேஏற்றி தொடங்கி வைத்தனர்

காட்பாடி, நவ.12-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, சேனூர் ஊராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக பகல் நேர முதியோர் மனமகிழ் வள மையம் எனும் அன்பு சோலை திட்டத்தை காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, மற்றும் வேலூர் பாராளுமன்ற உறுப்பினரும், திமுக வேலூர் வடக்கு மாவட்ட செயலாளருமான கதிர்ஆனந்த், ஆகியோர் அன்பு சோலை மையத்தை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் வி.அமுலு விஜயன், காட்பாடி ஒன்றிய குழு தலைவர் வே.வேல்முருகன், மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார், ஒன்றிய குழு துணை தலைவர் சரவணன், மாவட்ட சமூக நல அலுவலர் உமா, காட்பாடி வட்டாட்சியர் ஜெகதீஸ்வரன், காட்பாடி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நந்தகுமார், கனகராஜ், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் டிட்டா சரவணன், சேனூர் பாபு, கருணை இல்லம் நிறுவனர் மற்றும் இயக்குனருமான கஸ்தூரி பால்ராஜ், பால்ராஜ், ஒன்றிய குழு உறுப்பினர் பிரபு, சேனூர் ஊராட்சி மன்ற தலைவர் சாந்தி மணி, காட்பாடி திமுக ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் அசோக்குமார், கருணாலயா சிறார் (மு) கண்காணிப்பாளரும், அன்பு சோலை அறக்கட்டளை பொறுப்பாளருமான குடியாத்தம் சந்தோஷ்குமார், சமூக சேவகர் பார்த்திபன், உள்ளிட்ட சமூக நல தொண்டு நிறுவனர்கள், அரசு துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் முதியோர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# திருப்பத்தூரில் மகா பிரபுவின் ஹைக்கூ நூல் வெளியீடு

சிவகங்கை, நவ.12-

சிவகங்கை மாவட்ட எழுத்தாளர், கவிஞர், ஆசிரியர் மகா பிரபு ஓர் இலக்கிய சிந்தனையாளர். தொடர்ந்து கதை, கட்டுரை, கவிதைகளை எழுதி வருகிறார். இவரது பன்னிரண்டாவது நூலும், முதல் ஹைக்கூ கவிதை நூலுமான ' 'சிதறு தேங்காய் வெளியீட்டு விழா திருப்பத்தூர் பாபா மெட்ரிக் அமீர் பாதுஷா மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. சிவகங்கை மாவட்ட குழந்தைகள் அறிவியல் மாநாட்டு நிகழ்ச்சியில் பல பள்ளியிலிருந்து மாணவ மாணவிகள் தங்கள் ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்தனர். மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியில் மாகா பிரபுவின் ஹைக்கூ கவிதை நூல் 'சிதறு தேங்காய்' வெளியிடப்பட்டது. இவ்விழாவில் அப்பள்ளியில் தாளாளர் பாபா அமீர் பாதுஷா, தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட தலைவர் முனைவர் கோபிநாத், செயலாளர் ஆரோக்கியசாமி, மாநிலத் துணைத் தலைவர் முத்துலட்சுமி, குழந்தைகள் அறிவியல் மாநாடு மாநில ஒருங்கிணைப்பாளர்



தியாகராஜன், தென் மண்டல ஒருங்கிணைப்பாளர் பாலமுருகன், மாவட்ட கௌரவத் தலைவர் சாஸ்தா சுந்தரம், சிவகங்கை கிளைத் தலைவர் மணவாளன், புலவர் காளிராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நூல் குறித்து கருத்து தெரிவித்த ஆசிரியர் எட்வின் கவிஞர் மகா பிரபு ஒரு கவிதை இயந்திரமாக உருவெடுத்து இந்நூலில் இடம் பெற்றுள்ளன 220 ஹைக்கூ கவிதைகள் மூலம் காதல், அரசியல், மூடநம்பிக்கை, விழிப்புணர்வு மற்றும் சமூக அவலங்களை சுட்டிக்காட்டியுள்ளார் என்றார். சொற்கள் குறைவாக இருந்தாலும் நுண்ணிய சிந்தனைகளை விரிவாக விளக்கக்கூடிய நுட்பத்தை வெளிப்படுத்தி இந்நூலை வாசிக்கும் ஒவ்வொரு வாசகர் மனதிலும் ஒரு மின்மினி பிரபஞ்சத்தை தூண்டுவதாக ஹைக்கூ கவிதைகளை படைத்துள்ளார் என முனைவர் உஷா குறிப்பிட்டார்.


அதேபோல் கோயமுத்தூரில் நடைபெற்ற மற்றொரு விழாவில் சிவகங்கை மாவட்டக் கவிஞர்கள் மகா பிரபு தமிழ்க்கனல் மற்றும் கலையரசன் உட்பட நாடு முழுவதும் உள்ள 200 க்கும் மேற்பட்ட கவிஞர்கள் எழுதி ஔவை முருகாத்தம்மாள் தொகுத்த 'எண்ணங்களின் களஞ்சியம்' நூலின் எட்டாம் பாகம் வெளியிடப்பட்டது. அதில் கவிஞர் தமிழ்க்கனல் மற்றும் கவிஞர் கலையரசன் கலந்து கொண்டனர்.



# கோவையில் திமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

கோவை, நவ.12-

கோவை மாவட்டம் சிவானந்தா காலனி பகுதியில் கோவை ஒருங்கிணைந்த மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும்,இந்தியா கூட்டணி சார்பாகவும் இந்திய தேர்தல் ஆணையம் கொண்டு வந்த சிறப்பு வாக்காளர் திருத்தத்தை எதிர்த்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி தலைவர் ஈஸ்வரன், ஆதிதமிழர் பேரவை நிறுவன தலைவர், இரா.அதியமான் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் அவை தலைவர், ஆடிட்டர் ஆ.அர்ஜுனராஜ் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில துணை செயலாளர் நா. பெரியசாமி,இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில இளைஞர் அணி துணை தலைவர் எம்.கே.முகமது யூனஸ், ஆதித்தமிழர் கட்சித் தலைவர் கு.ஜக்கையன் , தந்தை பெரியார் திராவிட கழகம் பொதுச் செயலாளர் கு.ராமகிருஷ்ணன், கோவை மாநகர மாவட்ட கழக பொறுப்பாளர் துரை. செந்தமிழ் செல்வன்,மாவட்ட செயலாளர்கள் தொ.அ. ரவி, தளபதி முருகேசன், மாநில சொத்து பாதுகாப்பு குழு துணை தலைவர் பொங்கலூர் நா. பழனிச்சாமி, கழக மாணவரணி செயலாளர் ராஜீவ் காந்தி, மாநில தீர்மானக் குழுச் செயலாளர் நா. கார்த்திக், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ப. ராஜ்குமார், பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மேயர் ரங்கநாயகி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் டி ஆர் சண்முகசுந்தரம், திமுக ஒன்றிய செயலாளர் எஸ் எம் டி சண்முகசுந்தரம், கோட்டை அப்பாஸ், கூடலூர் நகராட்சி தலைவர் அறிவரசு, கவுன்சிலர் மாலதி, சம்பத், டெம்போ சிவா மற்றும் (இந்தியா கூட்டணி), அனைத்து கட்சி தலைவர்களும் கலந்து கொண்டு தேர்தல் ஆணையத்துக்கு எதிரான முழக்கங்களை எழுப்பி தங்களது எதிர்ப்பை தெரிவித்தனர். இதில் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




# வேலூரில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி

## மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பங்கேற்று கொடியசைத்து துவக்கி வைப்பு

வேலூர், நவ.12-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, பெருமைக்குரிய வேலூர் கோட்டை காந்தி சிலை எதிரில் விழிப்புணர்வு பேரணி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, கொடியசைத்து தொடங்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், வேலூர் தாசில்தார் வடிவேலு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் பற்குணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரேமலதா, உதவி செயற்பொறியாளர் குமரவேல், உடற்கல்வி ஆசிரியர் சரஸ்வதி, உதவி நிலநீர் வல்லுநர் பரிதிமாற் கலைஞர், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# சாலைப்பணியாளர் முதுநிலைப் பட்டியல் கோரிக்கை தாராபுரத்தில் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

திருப்பூர், நவ.12-

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலை பராமரிப்பு ஊழியர்கள் சங்கம் சார்பில் கோட்ட அளவிலான கோரிக்கை கூட்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் அரசு விதிமுறைகளையும் உத்தரவுகளையும் பின்பற்றாமல், சாலைப்பணியாளர்கள் பயிற்சிப் பணியில் சேர்ந்த தேதியை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்ட முதுநிலைப் பட்டியல் தவறானது என்பதைக் கூறி, அதனை ரத்து செய்ய வேண்டும் என ஊழியர்கள் வலியுறுத்தினர்.

மேலும், பணியாளர்கள் உண்மையில் பணி வரைமுறை செய்யப்பட்ட நாளையே அடிப்படையாகக் கொண்டு புதிய முதுநிலைப் பட்டியல் வெளியிடப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

தாராபுரத்தில் மட்டும் கோட்ட பொறியாளர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்ததை வைத்து பதவி உயர்வு வழங்கி வருகின்றனர் இதில் அரசியலில் தலையீடுகளும் மற்றும் அதிகாரிகள் கையூட்டு பெற்றுக் கொண்டும் இதனை செய்து வருகின்றனர் இதனை உயர் அதிகாரிகள் கண்டும் காணாமலும் இருக்கின்றனர் இதற்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

கூட்டத்தில் கோட்டத் தலைவர் ஜே.எல். பீட்டர் தலைமையேற்று நடத்தினார். கோட்டச் செயலாளர் கே. செந்தில்குமார் கோரிக்கை விளக்கவுரையாற்றினார்.

வாழ்த்துரையாக வட்டக்கிளைச் செயலாளர் பி. ராஜு (ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்கம்), எஸ். நவீன் (தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கம்), மாநில தணிக்கையாளர் சி. பாலராஜசேகர் (பொது நூலகத்துறை அலுவலர்கள் சங்கம்), வட்டாரத் தலைவர் எம். பெரியசாமி (ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம்), மாவட்டச் செயலாளர் கே. தமயந்தி (கிராம சுகாதார செவிலியர் சங்கம்) ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

சிறப்புரையாக மாநில துணைத்தலைவர் பி. செந்தில்குமார் மற்றும் மாநில பொருளாளர் என். ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் பேசினர். சாலைப்பணியாளர்களின் பணிநிலை, பாதுகாப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைப் பிரச்சனைகள் குறித்து விரிவாக விளக்கினர். அவர்கள், “சாலைப்பணியாளர்களின் நீண்டகால சேவை மற்றும் நலன்கள் அரசால் மதிக்கப்பட வேண்டும். அவர்களின் பணியிடப் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்,” என வலியுறுத்தினர்.

நிறைவுரையில் மாநில தலைவர் எஸ். ரமேஷ் பேசினார். அவர், “சாலைப்பணியாளர்கள் தினமும் மக்களின் உயிரைக் காப்பாற்றும் பணியை செய்து வருகின்றனர். ஆனால் அவர்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்படாமல் இருப்பது வருத்தத்திற்குரியது. இந்தக் கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும்,” என்றார்.

நன்றியுரையை கோட்டப் பொருளாளர் சி. ஜெகதீஸ் வழங்கினார்.

கூட்டத்தில் பல்வேறு துறைகளிலிருந்து நூற்றுக்கணக்கான அரசு ஊழியர்கள் பங்கேற்று, சாலைப்பணியாளர்களின் நியாயமான கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தனர்.

# தமிழ்நாடு பிராமணர் சங்கம் சிறப்பு பொதுக்குழு கூட்டம்

சென்னை, நவ.12-

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகில் தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் 45 ஆம் ஆண்டு மாநில நிர்வாக குழு செயற்குழு சிறப்பு பொதுக்குழு 1210 2025 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஜீயர் சுவாமிகள் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார் இதில் தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் மாநிலத் தலைவர் பிராமண சேவா ரத்னா ஸ்ரீ என் நாராயணன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சிறப்புப் பொதுக்குழுவில் திரைப்படத் தயாரிப்பாளர் பிரமிட் நடராஜன் ஊடகவியலாளர் அரசியல் விமர்சகர் ரங்கராஜ் பாண்டே ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை நிகழ்த்தினார்கள். மேலும் இந்த நிகழ்விற்கு 1,500 க்கு மேற்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர் சிறப்பு பொதுக்குழுவில் வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் யாருக்கு ஆதரவு அளிப்பது என்று முடிவு செய்யும் அதிகாரம் மாநில தலைவர் பிராமண சேவா ரத்னா ஸ்ரீ என் நாராயணன் அவர்களுக்கு வழங்கப்பட்டது மாநிலத் தலைவர் ஸ்ரீ நாராயணன் அவர்கள் எங்களுடைய சங்கமானது வருடம் தோறும் ஏழை எளிய மக்களுக்கு கல்வி உதவித்தொகை மருத்துவ உதவி தொகை திருமண உதவித்தொகை ஆகியவற்றை வழங்கி வருகிறது 20 சதவீதம் இதர சமூகத்தை சேர்ந்த மக்களும் பயன்பட்டு வருவதாக தெரிவித்தார் மேலும் பொதுக்குழு கூட்டத்தில் கேரளாவைப் போன்று தமிழகத்திலும் முற்பட்ட சமூகங்களை சேர்ந்த நலிவடைந்தவர்களுக்கு உதவும் வகையில் தனி





வாரியம் அமைக்க வேண்டும் மத்திய அரசின் சட்டமாக்கப்பட்ட பொருளாதாரத்தில் நலிவடைந்த முற்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு 10% இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த தமிழக அரசும், இதரக் கட்சிகளும் முன்வர வேண்டும் நவோதயா பள்ளிகளை தமிழகத்தில் மாவட்டம் தோறும் திறக்க தமிழக அரசு மத்திய அரசுக்கு உதவ வேண்டும் தெலுங்கு மலையாளம் கன்னடம் ஹிந்தி சமஸ்கிருதம் போன்ற மொழிகளை மாணவ மாணவிகளுக்கு விருப்ப பாடமாக கற்றுக் கொடுப்பதற்கு தமிழக அரசு முன்வர வேண்டும் தமிழக கோவில்களை மேலும் சிறப்பாக பராமரித்து நிர்வகிக்கும் வகையில் தன்னாட்சி உரிமை கொண்ட தனி வாரியம் அமைத்திட வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டதாக தெரிவித்தார்.

மேலும் மாநில அளவில் சிறப்பாக சேவையாற்றிய அனுபவம் மிக்க அவர்களுக்கு பிராமண சேவா ரத்னா விருது பிராமண சேவா விபூஷன் பிராமண சேவா பூஷன் ஆகிய விருதுகள் வழங்கப்பட்டது மேலும் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு தனி நபர் விருதும் முனைப்புடன் செயல்பட்ட கிளை மற்றும் மாவட்ட அமைப்புகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டது.

மேலும் விருதுநகர் மாவட்டத் தலைவர் ஸ்ரீவாரி முத்து பட்டர் அவர்கள் தலைமையில் ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன.




# கோவை கொடிசியாவில் இராணுவ தளவாட உற்பத்திதுறையைச் சார்ந்த கான்கிளேவ்

கோவை, நவ.12-

கொடிசியா இராணுவ புத்தாக்க மையம் மற்றும் அடல் இன்குபேஷன் சென்டர் இணைந்து, பாதுகாப்புத் துறை உற்பத்தி தொடர்பான இரண்டு நாள் “கான்கிளேவ்” நிகழ்ச்சி, வரும் நவம்பர் 13 மற்றும் 14, 2025 தேதிகளில் கோவைகொடிசியா வளாகத்தில்நடைபெறுகிறது.

இந்திய அரசின் பாதுகாப்பு துறை மற்றும் தர உறுதிப்பாட்டு இயக்ககம் இணைந்து நடத்தும் இந்நிகழ்வில், தனியார் நிறுவனங்கள், எம்எஸ்எம்இகள் மற்றும் ஸ்டார்ட்அப்புகள் பங்கேற்று, இராணுவ தளவாட உற்பத்தி துறையில் பங்களிக்க வழிவகுக்கும்.

நிகழ்ச்சியின் முக்கிய அம்சங்கள் உள்நாட்டு உற்பத்தி வாய்ப்புகள்டிஒஐமற்றும் டிஜி ஒஎஸ்அதிகாரிகள் வழிகாட்டல் ஜெம்இசந்தை அரசு தளவாட வாங்குதல் நடைமுறை விளக்கம் ட்ரூப் கம்பார்ட் லிமிடெட்ஜவுளி மற்றும் கம்பர்ட் பொருட்கள் உற்பத்தி வாய்ப்புகள் தரஉறுதிப்பாட்டுஇயக்குநரகம்உற்பத்தியாளர் பதிவு மற்றும் தர சான்றிதழ் நடைமுறைகள் வான்வெளி துறையில் தனியார் நிறுவனங்களுக்கு விநியோக வாய்ப்புகள் செமிலாக் சான்றிதழ்தொழில்நுட்ப தரம் மற்றும் அங்கீகாரம் பற்றிய விளக்கம் அரசு ஆதரவு திட்டங்கள் மற்றும் பதிவு முறைகள் மற்றும் பொதுரூ தனியார் இணைப்பு கொள்கைகளும் எஸ்ஐடிபிமற்றும் யூனியன் வங்கியால் எம்எஸ்எம்இ ஸ்டார்ட்அப்புகளுக்கு கடன் வசதிகள் இந்நிகழ்ச்சியின் நோக்கமேஇந்திய இராணுவ உற்பத்தியில் உள்நாட்டு பங்களிப்பை உயர்த்தி, தொழில் துறையினரை விழிப்புணர்வூட்டுவது என்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது.



# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது

சிவகங்கை, நவ.12-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்த லைவர் கா.பொற் கொடி தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 387 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி அவர்கள் உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், சூரக்கோட்டை ஊராட்சி, இடையார்வலசை கிராமத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் மீன் உற்பத்தி திட்டத்தை துவக்கி வைத்தார்.




# புதுப்பாக்கத்தில் இயங்கிவரும் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் ஏற்பாட்டில் நடைபெற்ற போதையில்லா தமிழகம் மாபெரும் ஐந்து கிலோ மீட்டர் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு பேரணி

செங்கல்பட்டு, நவ.12-

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட புதுப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில் வண்டலூர் செல்லும் பிரதான சாலையை ஒட்டி அமைந்துள்ள புதுப்பாக்கம் பேருந்து நிறுத்தம் அருகே இன்று காலை சுமார் 10.00 மணியளவில் புதுப்பாக்கத்தில் அமைந்துள்ள சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் இயங்கி வரும் உடற்கல்விகள் துறையும் நாட்டு நலப்பணித் திட்டமும் இணைந்து 2025_ 2026 ஆம் மாணவர்களைக் கொண்டு பொதுமக்களுக்கான போதையில்லா தமிழகம் என்ற தலைப்பில் மாபெரும் விழிப்புணர்வு பேரணியை நடத்தியது. இப்பேரணியில் சிறப்பு அழைப்பாளராக புதுப்பாக்கம் முதல் நிலை ஊராட்சி மன்ற தலைவரும், திமுக கட்சியின் திருப்போரூர் வடக்கு ஒன்றிய கழக சுற்றுச்சூழல் அணியின் ஒருங்கிணைப்பாளருமான புதுப்பாக்கம் எம். ஆறுமுகம் கலந்துகொண்டு இந்த மாபெரும் போதையில்லா தமிழகம் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவங்கி வைத்தார். இவருடன் காவல்துறை இணை ஆணையர் ஏசி கார்த்திகேயன் , சட்டக் கல்லூரியின் பேராசிரியர் முனைவர் ஜி ஜெய கௌரி, முனைவர் சா முத்து முனைவர் ஷாம் சுந்தர் ,எஸ் ஆரோக்கியம் , எம் பிருந்தாதேவி மற்றும் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்கள். புதுப்பாக்கம் பேருந்து நிறுத்தம் அருகே துவங்கிய போதையில்லா தமிழகம் என்ற பேரணியானது சிறுசேரி செல்லும் பிரதான சாலை வழியாக சுமார் ஐந்து கிலோ மீட்டர் தூரம் கடந்து சட்டக் கல்லூரி வரை நடைபெற்றது.

இதில் மாணவர்கள் குடியினாலும் போதை பொருள் பயன்படுத்துவதனாலும் ஏற்படும் தீமைகளை விளக்கி கூறும் வகையில் துண்டு பதாகைகளை ஏந்தியும், கோஷங்களை எழுப்பியும் நடந்து சென்றனர்கள். இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் உடற்கல்வி துறையும் நாட்டு நலப் பணித்திட்ட துறையும் இணைந்து செய்திருந்தது. புதுப்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரே பேரணியாக வந்தபோது சட்ட கல்லூரி மாணவர்கள் அனைவருக்கும் ஊராட்சி மன்ற தலைவர் எம். ஆறுமுகம் ஏற்பாட்டில் குடிநீர் பாட்டில் பிஸ்கட் வழங்கப்பட்டது.

# தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரிடம் சாலை மற்றும் சிறுகடை வியாகாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பு சங்கம் சார்பில் கோரிக்கை மனு வழங்கப்பட்டது

தாம்பரம், நவ.12-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் பாலசந்தர் அவர்களிடம் சாலை மற்றும் சிறுகடை வியாகாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பு சங்கம் சார்பில் சங்க தலைவர் கு.இராசன்மணி, பொது செயலாளர் ஆணை பன்னீர் செல்வம் ஆகியோரின் தலைமையில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. அதில் தாம்பரம் மாநகராட்சியில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.p 21959/2010 ல் நீதியரசர் சுகுணா அவர்களின் உத்தரவுபேரில் தாம்பரம் நகர விற்பனை குழு தாம்பரம் மாநகராட்சி ஆணையாரால் அமைக்கப்பட்டது. தாம்பரம் மாநகராட்சி சாலையோர மற்றும் சிறு வியாபாரிகளின் குழு கூட்டம் 21.03.2012 ல் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் 2வது தீர்மானமாக அண்ணா பேருந்து நிலையம் அருகில் உள்ள பரக்கடைகள் மற்றும்



பூக்கடைகள் அனைத்தும் ஜி.எஸ்.டி.சாலையில் உள்ள மழைநீர் கால்வாய் மீது 3வூ3 அளவில் அமைத்து கொடுக்க நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கபட்டது. தாம்பரம் மாநகராட்சி 50வது வார்டு ஜி.எஸ்.டி சாலையில் உள்ள மாநகராட்சி மழைநீர் கால்வாய் மீது கடை வைத்துள்ள 53 பேருக்கு நகராட்சி அடையாள அட்டை தாம்பரம் நாகராட்சி நிர்வாகத்தால் வழங்கப்பட்டது. இந்த நிலையில் தாம்பரம் நகர வியாபாரிகள் குழுவால் முடிவு செய்யபட்டு தாம்பரம் நகராட்சி நிர்வாகத்தால் அடையாள அட்டை வழங்கப்பட்டு ஒன்றிய அரசின் மத்திய சட்ட படியும் தமிழ்நாடு அரசின் The tamilnadu street vendors ( protection of livelihood and regulation of street vendimg(scheme and rules 2015 ல் கண்டிள்ளபடியும் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்க்கும் இடையூறு இல்லாத வகையில் தாம்பரம் மாநகராட்சி மழைநீர் கால்வாய் மீது சட்ட விதிகளின்படி கடை வைத்திருந்த 53 பேரின் கடைகளை அப்புறபடுத்திருப்பது ஒன்றிய, மாநில அரசுகளின் சட்டம் மற்றும் விதிமுறைகளை மீறிய செயலாகும். எனவே தங்களின் மேலான நிர்வாகம் எங்களின் இந்த மனுவினை பரிசீலனை செய்து சட்ட விதிமுறைகளை ஆய்வு செய்து சமூக பொருளாதராத்தில் பின் தங்கிய விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு 53 சாலை யோர சிறுகடை வியாபாரிகளுக்கு மீண்டும் கடை அமைத்துகொள்ள தகுந்த நடவடிக்கை எடுக்கமாறு வேண்டுகிறோம். இவ்வாறு மனுவில் தெரிவித்துள்ளனர்.அப்போது துரை மணிவண்ணன் மதிமுக, ஆபிரகாம் மக்கள் விடுதலை, செல் சேகர் விடுதலை சிறுத்தைகள் கட்சி, ஓ.கே.என். அப்துல்காதர் மனித நேய மக்கள் கட்சி, மார்கெட் ஞானபால், கேட் எம்.தர்மா தேமுதிக, மோகன்ராஜ் தி.க,எஸ்.எம். அனிபா அஇஅதிமுக, ஜாபர் சாதிக் சிபிஐஎம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.




## காட்பாடி சேனூர் ஊராட்சியில் அன்புச்சோலை மையம் கட்டிடத்தை மாவட்ட ஆட்சியர் மற்றும் ஆகியோர் குத்துவிளக்கேஏற்றி தொடங்கி வைத்தனர்

வேலூர், நவ.12-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, சேவூர் ஊராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக பகல் நேர முதியோர் மனமகிழ் வள மையம் எனும் அன்புச் சோலை திட்டத்தை காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, மற்றும் வேலூர் பாராளுமன்ற உறுப்பினரும், திமுக வேலூர் வடக்கு மாவட்ட செயலாளருமான கதிர்ஆனந்த், ஆகியோர் அன்புச்சோலை மையத்தை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் வி.அமுலு விஜயன், காட்பாடி ஒன்றிய குழு தலைவர் வே.வேல்முருகன், மாநகராட்சி துணை மேயர் மா.சுனில்குமார், ஒன்றிய குழு துணை தலைவர் சரவணன், மாவட்ட சமூக நல அலுவலர் உமா, காட்பாடி வட்டாட்சியர் ஜெகதீஸ்வரன், காட்பாடி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நந்தகுமார், கனகராஜ், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் டிட்டா சரவணன், சேனூர் பாபு, கருணை இல்லம் நிறுவனர் மற்றும் இயக்குனருமான கஸ்தூரி பால்ராஜ், பால்ராஜ், ஒன்றிய குழு உறுப்பினர் பிரபு, சேனூர் ஊராட்சி மன்ற தலைவர் லதா மணி, காட்பாடி திமுக ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் அசோக் குமார், கருணாலயம் சிறார் கண்காணிப்பாளர் மற்றும் அன்பு சோலை அறக்கட்டளை பொறுப்பாளர் குடியாத்தம் சந்தோஷ் குமார், சமூக சேவகர் பார்த்திபன், உள்ளிட்ட சமூக நல துறை அலுவலர்கள் அரசு அலுவலர்கள் முதியோர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



■ திருச்சி ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதி எம். எல் .ஏ பழனியாண்டி உமா மகேஸ்வரி தம்பதியரின் இளைய மகனும் தொழில திபருமான விஜயபாரதி மற்றும் முள்ளிக்கரும்பூர் முருகானந்தம்.கலைச்செல்வி தம்பதியரின் மகள் மனிஷா ஆகியோரின் திருமண விழா நேற்று திருச்சி சோமரசம் பேட்டை டி.எம்.ஆர்.கார்டன் டாக்டர் கலைஞர் திடலில் நேற்று நடைபெற்றது விழாவில் முதலமைச்சர் மு .க . ஸ்டாலின் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். திருமண விழாவில் கலந்து கொண்டஅமைச்சர் கே. என். நேரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி. ரகுபதி.எஸ். எஸ்.சிவசங்கர். மெய்யநாதன்.கீதா ஜீவன்.எம்.பி.க்கள் திருச்சி சிவா அ.ராசா.துரை வைகோ.எம். எல் ஏ.க்கள் .காடுவெட்டி தியாகராஜன்.இனிகோ இருதயராஜ்.மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி,தமிழ்நாடு முத்தரையர் முன்னேற்ற சங்க தலைவர் ஆர்.விஸ்வநாதன்,வீர முத்தரையர் முன்னேற்ற சங்க தலைவரும் தமிழர் தேசம் கட்சித் தலைவருமான கே.கே. செல்வக்குமார் மற்றும் பலர் உடன் இருந்தனர்.




■ திருச்சி மாவட்டம் மணப்பாறை கிழக்கு ஒன்றியம் தொப்பம்பட்டி ஊராட்சி கரும்புளிப்பட்டியில் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என் நேரு 73வது பிறந்தநாள் முன்னிட்டு மாபெரும் சமபந்தி அன்னதான விழாவை மணப்பாறை கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ் ஏ எஸ் ஆரோக்கியசாமி தொடங்கி வைத்தார் .இந்த விழாவில் ஒன்றிய பொருளாளர் ராமசாமி.முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ராமசாமி.ஒன்றிய அமைப்பாளர் பழனிச்சாமி. மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் ராஜேந்திரன்.ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்கார்த்திக் குமார்.அலெக்ஸ் மற்றும் அன்னதான விழாவில் திரளாக பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



■ மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கருப்பாயூரணி கிராமத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர முறைத் திருத்தம் 2026 தொடர்பாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடுகளுக்கு சென்று வாக்காளர் கணக்கீட்டு படிவங்களை வழங்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவின் குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார்.





## கீழக்கோட்டை அரசு பள்ளியில் அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் தினம் கொண்டாடப்பட்டது

காளையார்கோவில், நவ.12-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றிய த்திலுள்ள கீழக் கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் தினம் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் பள்ளியின் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக் கியசாமி தலைமை வகித்து உலக அறிவியல் தினத்தைக் குறித்து சிறப்பு ரையாற்றினார். இவ்வருட மையக் கருபொரு ளானது அறிவியலில் நம்பிக்கையை உருவாக்குதல் (Building Trust in Science) என்பதாகும். ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 10 ஆம் தேதியை அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் தினமாக கொண்டாடி வருகிறோம். சமூகத்தில் அறிவியலின் குறிப்பிடத்தக்க பங்கை எடுத்துக்காட்டுகிறது மற்றும் வளர்ந்து வரும் அறிவியல் பிரச்சினைகள் குறித்த விவாதங்களில் பரந்த பொதுமக்களை ஈடுபடுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது.

நமது அன்றாட வாழ்வில் அறிவியலின் முக்கியத் துவத்தையும் பொருத்த த்தையும் அடிக்கோ டிட்டுக் காட்டுகிறது. அறிவியலை சமூகத்துடன் மிகவும் நெருக்கமாக இணைப்பதன் மூலம் அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் தினம் அறிவியலின் வளர்ச்சிகள் குறித்து குடிமக்களுக்குத் தெரிவிக்கப்படுவதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நாம் வீடு என்று அழைக்கும் பூமி கோளை குறிப்பிடத்தக்க பலவீனமாக்கும் காரணிகளைப் பற்றிய நமது புரிதலை விரிவுபடுத்துவதிலும் நமது சமூகங்களை இன்னும் நிலையானதாக மாற்றுவதிலும் விஞ்ஞானிகள் வகிக்கும் பங்கையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. அமைதி மற்றும் வளர்ச்சிக்கான அறிவியல் என்ற தலைப்பில் மக்களையும் அணிதிரட்டுவதற்கான வாய்ப்பை இந்த நாள் வழங்குகிறது. அரசாங்க அதிகாரிகள் முதல் ஊடகங்கள் வரை பள்ளி மாணவர்கள் வரை அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் தினத்தைக் கொண்டாடுவதில் உங்கள் சொந்த நிகழ்வையோ அல்லது செயல்பாட டையோ ஏற்பாடு செய்வதன் மூலம் அனைவரையும் ஒன்றிணைக்க யுனெஸ்கோ வலுவாக ஊக்குவிக்கிறது.

நிலையான வளர்ச்சிக்கான அடிப்படை அறிவியல்

மருத்துவம் தொழில் விவசாயம் நீர்வளம் ஆற்றல் திட்டமிடல் சுற்றுச்சூழல் தகவல் தொடர்பு மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றில் முன்னேற்றங்களுக்கு அடிப்படை அறிவியலின் பயன்பாடுகள் இன்றியமையாதவை. அடிப்படை அறிவியலுக்கான உள்நாட்டு ஆராய்ச்சி செலவினங்களின் பங்கு

86 நாடுகளுக்கான யுனெஸ்கோ அறிவியல் அறிக்கை 2021 இன் தரவுகளின்படி சிலர் தங்கள் ஆராய்ச்சி செலவினங்களில் 10% க்கும் குறைவாக அடிப்படை அறிவியலுக்காகவும் மற்றவர்கள் 30% க்கும் அதிகமாகவும் செலவிடுகின்றனர்.

அடிப்படை அறிவியலில் திறன் கொண்டிருப்பது வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளின் நலன்களில் உள்ளது. நிலையான வளர்ச்சியை வளர்ப்பதற்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் பயன்பாடுகளுக்கான சாத்தியக்கூறுகள் கொடுக்கப்பட்டுள்ளன என்றார். ஆசிரியை கமலம் பாய் வாழ்த்துரை வழங்கினர். மாணவர்களுக்கு விஞ்ஞான துளிர் இதழ் வழங்கப்பட்டு அதில் உள்ள பல்வேறு அறிவியல் கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன. முன்னதாக கணித பட்டதாரி ஆசிரியர் மீனாட்சி வரவேற்றார். ஆங்கில பட்டதாரி ஆசிரியர் கீதா நன்றியுரை கூறினார்.






## தேவகோட்டையில் யோகா உலக சாதனை நிகழ்ச்சி

தேவகோட்டை, நவ.12-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் யோகா உலக சாதனை நிகழ்வு ராம் நகரில் உள்ள புனித ஜோசப் நடுநிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

உலக யோகா தினத்தை முன்னிட்டு தேவகோட்டை சாய்மகிழ் அகாடமி சார்பாக இந்த யோகா உலகசாதனை நிகழ்வு நடத்தப்பட்டது. பொதுமக்கள் யோகா ஆசிரியர்கள் பள்ளி மாணவர்கள் உட்பட 1027 பேர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியில் தேவகோட்டை நகர் மன்ற தலைவர் சுந்தரலிங்கம், நகர் மன்ற துணைத் தலைவர் ரமேஷ், தேவகோட்டை குழந்தைகள் நல சிறப்பு மருத்துவர் செந்தில்குமார், தமிழ்நாடு யோகா கூட்டமைப்பின் சிவகங்கை மாவட்ட செயலாளர் யோகா ஆச்சார்யா புவனேஷ் மற்றம் சாய்மகிழ் ஆகாடமி நிறுவனர் திருமதி சுருதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் உஷ்டாசனா எனும் ஆசனத்தில் 180 வினாடிகள் இருந்து உலக சாதனை படைத்தனர் கலந்து கொண்ட அனைவருக்கும் பாராட்டு சான்றிதழ்களும் யோகா ஆசிரியர்களுக்கு சிறப்பு பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.



## வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கட்கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்

வேலூர், நவ.12-

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் த. மாலதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பூ.காஞ்சனா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் ஜெயசித்ரா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





## மணப்பாறை அருகே திமுக முதன்மைச் செயலாளர் பிறந்தநாளை பிரியாணி வழங்கி கொண்டாடிய திமுகவினர்

மணப்பாறை, நவ.12-

திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே உள்ள வையம்பட்டியில் திமுகவின் முதன்மைச் செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான கே.என்.நேருவின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. பேருந்து நிலையம் அருகே பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து அமைக்கப்பட்டிருந்த அலங்கார மேடையில் முன்னாள் வையம்பட்டி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ராஜலெட்சுமி வெங்கடேசன் தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்பு, மற்றும் பிரியாணி வழங்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து பேருந்து பயணிகளுக்கு லட்டு வழங்கி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். இதில் முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாலசுப்பிரமணியன், மாவட்ட பிரதிநிதி விவி.வெங்கடேசன், ஒன்றிய பொருளாளர் ஓந்தாம்பட்டி மணி, வழக்கறிஞர் துரைஅழகிரி, ஒன்றிய அவைத்தலைவர் அண்ணாத்துரை, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் நாகராஜ், சதீஸ், மணிகண்டன் உள்ளிட்ட திமுகவினர் திரளாக கலந்து கொண்டனர். விழாவில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம் காரைக்குடி பகுதியில் திராவிட கழகம் மத்திய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர் இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட தி.க.சார்பாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட காப்பாளர் சாமிதிராவிடமணி, மாவட்ட தலைவர் ம.கு.வைகறை, மாவட்ட செயலாளர் சி.செல்வமணி, மாவட்ட துணைத்தலைவர்.கொ.மணிவண்ணன், தலைமைக்கழகப் பேச்சாளர் தி. என்னாரெசு பிராட்லா, சிவகங்கை மாவட்ட காப்பாளர் வழக்கறிஞர் ச.இன்பலாதன், மாவட்ட தலைவர் இர.புகழேந்தி,மாவட்டதுணைத்தவர் ச.ஆனந்தவேல்,வேம்பத்தூர் கே.வி.செயராமன், திருப்புவனம் இராஜாங்கம், சாலைக்கிராமம் சுந்தரராஜன், பழனி வட்டன், மற்றும் திமுக., காங், சிபிஅய்,சிபிஎம், மதிமுக.வி.சி.க., மக்கள் நீதிமய்யம்,உட்பட மதச் சார்பற்ற ஜனநாயக முற்போக்குஅணியின் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161